


திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியின் 15வது பட்டமளிப்பு விழாவில், ஆஸ்திரேலிய தூதரக அதிகாரி மைக்கேல் கார்ட்டர் கலந்து கொண்டு பட்டம், பல்கலைக்கழக அளவில் ரேங்க் எடுத்த மாணவர்களுக்கு தங்கப்பதக்கம், ரொக்கப்பரிசு வழங்கினார். அருகில் கல்லூரி தலைவர் கனகராஜ், முதல்வர் விஜயராகவன், நிர்வாக அலுவலர் ரவி.

## திருநின்றவூர்

# ஜெயா பொறியியல் கல்லூரி 15வது பட்டமளிப்பு விழா

திருவள்ளூர், மே 13: திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியின் 15வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது.

ஜெயா கல்வி குழுமங்களின் தலைவர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். செயலாளர் க.விஜயகுமாரி, துணை தலைவர் க.நவராஜ், நிர்வாக அறங்காவலர் டாக்டர் க.தீனா முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் கே.விஜயராகவன், நிர்வாக அலுவலர் ரவி வரவேற்றனர்.

ஆஸ்திரேலிய தூதரக அதிகாரி மைக்கேல் கார்ட்டர் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு 750 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களையும், அண்ணா பல்கலைக்கழக அளவில் ரேங்க் எடுத்த 49 மாணவ, மாணவிகளுக்கு தங்கப்பதக்கமும், ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசும் வழங்கி வாழ்த்தினார்.

அவர் பேசும்போது, “பட்டம் பெற்ற உங்களுக்கு இந்தியாவில் நிறைய வேலைவாய்ப்பு காத்துக் கொண்டு இருக்கிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி அதற்கு ஏற்றவாறு உங்களை தயார்படுத்தி கொள்ள வேண்டும். தொடர்ந்து படித்து பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு சாதனை படைக்க வாழ்த்துகிறேன்” என்றார்.

எம்சிஏ துறை தலைவர் கேசவன் நன்றி கூறினார்.